
# திராவிடத்தால் வாழ்கிறோம்

822

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## சாமானியர்களுக்காக சிந்திக்கும் திராவிட மாடல்!

ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் கல்வி, மருத்துவம், வீட்டுச் செலவுகள் அல்லது எதிர்பாராத திடீர் செலவுகளுக்கு நிவாரணியாக இருப்பது, தங்க நகைக்கடன்தான். கூட்டுறவு வங்கிகள், வங்கிகளில் தங்க நகைகளுக்கு மிகக் குறைந்த வட்டியில் கடன் கிடைக்கும். ஆனால், 2025-26 நிதியாண்டுக்கான ஒன்றிய பட்ஜெட்டின்படி, இந்திய ரிசர்வ் வங்கி, தங்க நகைக் கடன் தொடர்பாக புதிய விதிமுறைகளை வகுத்துள்ளது.

அதன்படி, இனி ஆண்டுதோறும் வட்டியை மட்டும் செலுத்தி, மறு அடமானம் செய்ய முடியாது. வட்டி, அசலை முழுமையாகச் செலுத்தி நகைகளை மீட்டு, மறுநாள்தான் அடமானம் வைக்க வேண்டும். இதனால் நகைகளை மீட்கவே, இனி கந்துவட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய சூழல் ஏற்படும். முறைசாரா கடன் நிறுவனங்களுக்கே இது சாதகமாக இருக்கும் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

அதேவேளையில், தனிநபர்கள், சுய உதவிக்குழுக்கள் உள்ளிட்டவற்றிற்கு கடன் வழங்கும் நிறுவனங்கள் வலுக்கட்டாயமாக வசூலிப்பதைத் தடுக்க வகைசெய்யும் புதிய சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது தமிழ்நாடு அரசு. இதுதொடர்பாக, துணை முதலமைச்சர் தாக்கல் செய்த மசோதாவில், “கடன் வழங்கிய நிறுவனம் கடன் பெற்றவரையோ அல்லது அவரது குடும்பத்தினரையோ வலுக்கட்டாய நடவடிக்கைக்கு உட்படுத்தவோ, மிரட்டவோ, பின் தொடரவோ, அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்யவோ கூடாது. வலுக்கட்டாயமாக வசூலிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால், 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.5 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

வலுக்கட்டாய நடவடிக்கைகளால் கடன்பெறுபவர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் தற்கொலை செய்துகொண்டால், கடன் கொடுத்த நிறுவனம் தற்கொலைக்குத் தூண்டியதாக கருதப்படும். இந்தச் சட்டத்தில் கைது செய்யப்படுபவருக்குப் பிணை கிடையாது” என சாமானிய மக்களின் நலன் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

திராவிட மாடல் எளியோரைப் பற்றி சிந்திக்கிறது. ஆனால் பா.ஜ.க. மாடல்?

## ஃப்ளாஷ்பேக்





எஸ்.ஏ.அம்பிகாபதி

### பேராசிரியரிடமிருந்து நல்லாசிரியர் விருது!!

15.09.2006 அன்று சென்னையில், தமிழ்நாடு அரசு சார்பில் நல்லாசிரியர் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அன்றைய நிதி அமைச்சரும் கழகப் பொதுச் செயலாளருமான இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் பங்கேற்று விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். தலைமையாசிரியராக சிறப்பாகப் பணியாற்றி, நல்லாசிரியர் விருதுக்குத் தேர்வான என்னுடைய துணைவியார் அ.சூடாமணி அவர்கள் பேராசிரியரிடமிருந்து விருது பெற்ற காட்சி. அப்போது, அன்றைய கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுடன் எடுக்கப்பட்ட புகைப்படம்.

– எஸ்.ஏ.அம்பிகாபதி,
மாவட்டக் கழக அவைத்தலைவர், திருச்சி வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### திராவிட மாணவ முன்னேற்றக் கழகம்!

தி.மு.கழகம் தொடங்கப்பட்டபின், 1950-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ஆம் தேதி, சென்னை, செயின்ட் மேரீஸ் மண்டபத்தில், திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தின் முதல் மாநாட்டினை பேரறிஞர் அண்ணா தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டில், ‘திராவிட நாடு’ உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வடநாட்டுச் சுரண்டலை ஒழிக்க, வடநாட்டுப் பொருட்களைப் புறக்கணிக்கவும் மாநாடு அறைகூவல் விடுத்தது.

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

118

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி. சென்னையின் பெருமைமிகு அடையாளங்களில் ஒன்று. தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வருகை தரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கி, கல்வி பயில்வதற்கு வசதியாக, சென்னை, சைதாப்பேட்டையில் அன்றைய முதலமைச்சர் காமராஜர் அவர்களால் திறக்கப்பட்ட கல்லூரி மாணவர் விடுதி. 1961-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 15-ஆம் தேதி திறக்கப்பட்ட இந்த விடுதியில், இதுவரையில் சுமார் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கி, உயர்கல்வி பெற்று பயனடைந்துள்ளனர்.

இந்த நிலையில், விடுதியின் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனவும், கூடுதல் கட்டடம் தேவை எனவும் தாழ்த்தப்பட்ட மாணவர்களிடமிருந்து கோரிக்கைகள் எழுந்தன. குறிப்பாக, சென்னையில் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பொறியியல், தொழில்நுட்பம், கலை மற்றும் அறிவியல் துறைகளில் பயின்று வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருகிறது. அதனால், அவர்களது தங்குமிடத் தேவையைப் பூர்த்தி செய்யவும், அவர்களது திறனை மேம்படுத்தவும் திட்டமிட்ட நமது திராவிட மாடல் அரசு, மாணவர்களின் கோரிக்கைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்தது.

> தமிழ்நாட்டில் ஆதிதிராவிட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 1,326 ஆதிதிராவிடர் நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சுமார் 90 ஆயிரம் மாணவ மாணவிகள் தங்கிப் பயின்று வருகின்றனர். பழங்குடியினர் சமூக மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக 43 பழங்குடியினர் நல விடுதிகளும் செயல்படுகின்றன.

அதன்படி 2022-23-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சென்னை, எம்.சி. ராஜா கல்லூரி விடுதி வளாகத்தில், காலியாகவுள்ள இடத்தில் சுமார் 1,01,101 சதுர அடி பரப்பளவில் 10 தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதிக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்தார் நம் முதலமைச்சர். அந்த அறிவிப்பினை வெளியிட்ட வேகத்திலேயே 2023-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12-ஆம் தேதி விடுதி வளாகத்தில் புதிய விடுதி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

‘ரூ.44.5 கோடி மதிப்பீட்டில் 10 தளங்களுடன் நவீன வசதிகளுடன் அமையும், இந்தக் கூடுதல் கட்டடம் பயன்பாட்டிற்கு வரும் போது ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். பல்வேறு மாவட்டங்களில் இருந்து, சென்னைக்குப் படிக்க வரும் மாணவர்களுக்குத் தங்கும் வசதியுடன், உயர்கல்வி வாய்ப்பும் உருவாகும்”என்கிற எதிர்பார்ப்பினையும் வெளியிட்டார் நமது முதலமைச்சர்.

10 தளங்களில் 500 மாணவர்கள் தங்கி பயிலும் வகையில், 121 அறைகள் இந்தப் புதிய கட்டடத்தில் அமைந்துள்ளன. நவீன வசதியுடன் நூலகம், பயிலகம், கற்றல் கற்பித்தல் அறை, உடற்பயிற்சிக் கூடம், உள் அரங்கு விளையாட்டுக் கூடம் ஆகிய அனைத்து வசதிகளும் இந்தப் புதிய விடுதியில் அமைக்கப்பட்டுள்ளன.

தரை தளத்தில் சமையலறை, உணவருந்தும் கூடம், கண்காணிப்பாளர் அறை, பராமரிப்பாளர் அறை, ஓய்வறை, 4 மாணவர்கள் தங்கும் வகையிலான அறைகள், முதல் தளத்தில் நூலக அறை, பன்னோக்குக் கூடம், 9 மாணவர்கள் தங்கும் வகையிலான அறைகள், இரண்டாம் தளம் முதல் பத்தாவது தளம் வரை ஒவ்வொரு தளத்திலும் நூலக அறை, 12 மாணவர்கள் தங்கும் வகையிலான அறைகள் மற்றும் இக்கட்டடத்தின் மேல்தளத்தில் 35,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு நீர்த்தேக்கத் தொட்டிகள், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்ச் சுத்திகரிப்பு வசதி, 1,20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, சுற்றுச்சுவர், உட்புறச் சாலை வசதிகள், தீயணைப்பு வசதிகள், மின்தூக்கிகள், பார்வையாளர் அறை போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட தருவாயில், கடந்த 29.3.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், பேசிய முதலமைச்சர், “எம்.சி.ராஜா விடுதி வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய விடுதிக் கட்டடத்தை, சமத்துவ நாளான அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளான ஏப்ரல் 14-ஆம் தேதி திறக்கப்பட உள்ளதாக அறிவித்ததுடன், அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும்” என்றும் அழைப்பு விடுத்தார்.

அதன்படி, ஏப்ரல் 14 அன்று, விடுதியைத் திறந்து வைத்தார் முதலமைச்சர். விழாவில் பிரகாஷ் அம்பேத்கர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். அப்போது பேசிய முதலமைச்சர், “தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர் எம்.சி.ராஜா. அவர்தான் பட்டியலின மக்களின் துயரங்களை, முதன்முதலாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவர். அயோத்திதாசப் பண்டிதரின் மறைவுக்குப் பிறகு, சென்னை ஆதிதிராவிடர் மகாஜன சபையைச் சீரமைத்து நடத்தியவர். நீதிக்கட்சியை உருவாக்கிய தலைவர்களில் முக்கியமான ஒருவர். அத்தகைய பெருந்தலைவரின் பெயரால் அமைந்திருக்கின்ற அந்த விடுதி, இலட்சியத்துடன் படித்து முன்னேற பாடுபட்டவர்களுக்கான இடமாக இருந்திருக்கிறது” எனப் பெருமையுடன் குறிப்பிட்டார். இன்றும், இலட்சிய வாழ்க்கை கொண்டவர்களுக்கு இந்த ஆட்சிக்காலம் வசந்த காலம்! .

> விடுதியின் முகப்புறத்தில் தனிப்பெரும் தலைவர் எம்.சி.ராஜாவின் மார்பளவு சிலை, மிக விரைவில் வைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

## எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி புதிய கட்டடம்:

# இலட்சிய வாழ்க்கையின் புதிய முகவரி!







> “இலட்சியத்துடன் படித்து முன்னேற பாடுபட்டவர்களுக்கான இடமாக இருந்திருக்கிறது!”

**விடுதியின் வசதிகள் :**
* 1,01,101 சதுர அடி கட்டடம்.
* 10 தளங்கள் - 121 அறைகள்.
* 484 மாணவர்கள் தங்கும் வசதி.
* ஒவ்வொரு தளத்திலும் நூலக அறை.

...சாதனை தொடரும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131